Australian Government
Department of Home Affairs



Domestic and Family Violence Visa Support

# உங்களுடைய விசாவிற்கான சரிபார்ப்பு அட்டவனை

### ☐ உங்களுடைய விசா தகு-நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

Visa Entitlement Verification Online (VEVO) ('இணைய-வழி- விசா உரிம சரிபார்ப்பு') மூலமாக இணைய-வழியில் உங்களுடைய விசா தகு-நிலை என்ன என்பதை நீங்கள் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். நீங்கள் வைத்துள்ள விசா எது, அது எப்போது இறுதியுறுகிறது, மற்றும் உங்களுடைய விசா நிபந்தனைகள் என்ன என்பதை VEVO உங்களுக்குச் சொல்லும்.

VEVO-வை அணுகுவதில் உங்களுக்கு உதவி தேவையெனில், Department of Home Affairs ('உள்-நாட்டு விவகாரத் திணைக்களம்')-ஐ நீங்கள் 131 881-இல் அழைக்கலாம்.

***வலைத்தலம்:***
immi.homeaffairs.gov.au/visas/already-have-a-visa/check-visa-details-and-conditions/overview

### ☐ உங்களுடைய அடையாள ஆவணங்களைப் பெறும் வசதி உங்களுக்கு இருக்கிறதா?

உங்களுடைய கடவுச்சீட்டைப் பெறும் வசதி உங்களுக்கு இருக்கிறதா? உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்கள் நாட்டின் உதவித் தூதரலுவலகம் அல்லது தூதரகத்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம். விசா விண்ணப்பம் ஒன்றிற்கு ஆதாரமாக, ஒருவரைப் பற்றிய மற்ற ஆவணங்களையும் நாங்கள் கேட்கக்கூடும்.

***வலைத்தலம்:***
protocol.dfat.gov.au/Public/MissionsInAustralia

நினைவில் கொள்ளுங்கள், யாராவதொருவருக்குப் பாரதூரமான காயம் ஏற்பட்டிருந்தால், அல்லது அவருக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்பட்டால், அல்லது யாராவதொருவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டால், அல்லது தகாத நிகழ்வு ஒன்றை நீங்கள் கண்ணுற்றால், மூன்று பூஜ்ய (000)த்தினை அழையுங்கள்.

## ☐ உங்களுக்கான ImmiAccount ஒன்று உங்களிடம் இருக்கிறதா?

உங்களுடைய விசா விண்ணப்பத்தைப் பற்றித் திணைக்களத்துடன் தொடர்பாடல் கொள்ள உங்களுக்குச் சொந்தமான ImmiAccount ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது முக்கியம். வாழ்க்கைத்துணை விசா விண்ணப்பதாரியாக, அல்லது வாழ்க்கைத்துணை விசா ஒன்றை வைத்திருப்பவராக நீங்கள் இருந்தால், மற்ற எந்த ImmiAccounts -இல் இருந்தும் நிலுவையிலுள்ள உங்களுடைய விசா விண்ணப்பத்தினை நீங்கள் நீக்கிவிடலாம். இப்படிச் செய்வதற்கு, கீழ்க் காணும் இரண்டையும் பூர்த்தி செய்யுங்கள்:

- உங்களுக்கான ImmiAccount ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்,
- முகவர் ஒருவருடைய அல்லது உங்களுடைய 'ஏற்பாதரவாள'(sponsor)ருடைய ImmiAccount-இல் இருந்து உங்களுடைய விண்ணப்பத்தினை நீக்குமாறு கேளுங்கள், மற்றும் இணைய-வழியிலான ImmiAccount Technical Support Form எனும் படிவத்தினைப் பூர்த்தி செய்து உங்களுடைய விண்ணப்பத்தினை உங்களுடைய புதிய கணக்கிற்கு மாற்றிக்கொள்ளுங்கள்.

உங்களுடைய கடவுச்சொல்(password)லையும் நீங்கள் மாற்றவேண்டும்.

***வலைத்தலம்:*** online.immi.gov.au

## ☐ எம்மிடமுள்ள உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் புதுப்பித்துவிட்டீர்களா?

உங்களுடைய தொலைபேசி இலக்கம், வீட்டு விலாசம் அல்லது அஞ்சல் பெட்டி விலாசம் போன்ற உங்களுடைய தற்போதையத் தொடர்பு விபரங்கள் எம்மிடம் இருக்கவேண்டும் என்பது முக்கியம்.

உங்களைப் பற்றிய விபரங்களை நீங்கள் உங்களுடைய ImmiAccount-இல் புதுப்பிக்கலாம், அல்லது தொடர்பு/கடவுச்சீட்டு விபர மாற்றத்திற்கான படிவம் ஒன்றை எமக்கு அனுப்புவதன் மூலம் அவற்றைத் தெரிவிக்கலாம். எம்மிடமிருந்து வரும் கடிதத் தொடர்பாடலை நீங்கள் பெறுகிறீர்கள் என்பதை இது உறுதி செய்யும்.

**வலைத்தலம்:** immi.homeaffairs.gov.au/form-listing/forms/929.pdf

மற்றவர்களுடன் நீங்கள் தொடர்பில் இருக்க உதவவும், உங்களுடைய தபால்கள் உங்களுக்கு வந்து சேர்வதை உறுதிப்படுத்தவும், குடும்ப வன்முறைக்கு ஆட்பட்டவர்களுக்கு இலவச அஞ்சல் பெட்டி அணுகு வசதிகளை 'ஆஸ்திரேலியா போஸ்ட்' அளிக்கிறது.

***வலைத்தலம்:*** auspost.com.au/receiving/manage-your-mail/redirect-hold-mail/redirect-mail/free-mail-redirection-and-po-boxes

## ☐ குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களில் யாராவதொருவர் உங்களுக்கு உதவிக்கொண்டிருக்கிறார்களா?

குடிவரவு சம்பந்தப்பட்ட அறிவுரையைப் பெறவும், தேவைப்பட்டால், விசா ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்கான உதவியைப் பெறவும் உங்களால் இயலும். புலப்பெயர்வு முகவராக, அல்லது சட்டதரணியாக அந்த நபர் இருப்பாரேயானால், அவர் பதிவு பெற்றிருக்கவேண்டியது முக்கியமாகும். Department of Home Affairs- இன் வலைத்தலத்தில் பதிவுபெற்ற முகவர்களது அட்டவணை ஒன்று உள்ளது.

***வலைத்தலம்:*** immi.homeaffairs.gov.au/help-support/who-can-help-with-your-application/overview

புலப்பெயர்வு சம்பந்தப்பட்ட அறிவுரை உங்களுக்குத் தேவைப்பட்டால், சிறப்புத்துவம் வாய்ந்த சட்ட சேவை வழங்குநர்களிடமிருந்து கிடைக்கும் இலவச சட்ட உதவியும் இருக்கிறது.

***வலைத்தலம்:*** familyviolencelaw.gov.au

## ☐ எம்முடைய தகவல்களை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவையா?

Translating and Interpreting Service (TIS National) (‘மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை’ (‘டிஸ் நேஷனல்’)) ஆங்கிலம் பேசாதவர்களுக்கு உரைபெயர்ப்பு சேவைகளை அளிக்கிறது. 131 450-இல் நீங்கள் அவர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

***வலைத்தலம்:*** tisnational.gov.au

## இணையத்தில் நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்களா?

உங்களுடைய சொந்தப் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ளவும், மற்றவர்களுடன் தொடர்பில் இருக்க தொழில் நுட்பத்தைத் தொடர்ந்து பயன்படுத்த இயலுவதை உறுதிப்படுத்தவும் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை அடையாளம் காண உதவுவதற்கு இணைய-வழியில் கிடைக்கும் ‘eSafety ஆணைய’ரது சரிபார்ப்பு அட்டவணையை நீங்கள் பயன்படுத்தலாம்.

***வலைத்தலம்:*** esafety.gov.au/key-issues/domestic-family-violence/online-safety-planning/online-safety-checklist

## ☐ பதிவுகளை நீங்கள் வைத்திருக்கிறீர்களா?

உங்களுக்கும், துஷ்ப்பிரயோகம் செய்யும், அல்லது அச்சுறுத்தும் எவ்வொரு நபருக்கும் இடையே இடம்பெறும் விடயங்களின் பதிவு ஒன்றை நீங்கள் வைத்திருப்பது நல்லதொரு யோசனையாகும். காவல்துறைக்குப் புகார் ஒன்றை ஏற்படுத்தவோ, பாதுகாப்பு உத்தரவு ஒன்றைப் பெறவோ அல்லது குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான உத்தரவை நாடவோ வேண்டிய தேவை உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டால் இதை நீங்கள் ஆதாரமாகப் பயன்படுத்த இயலும்.

சொல்லப்பட்ட விடயங்கள் என்ன என்பதைப் பற்றிய பதிவு ஒன்றை வைத்துக்கொள்ள முக்கியமான உரையாடல்களை மின்னஞ்சல் அல்லது

குறுஞ்செய்தி மூலமாக மேற்கொள்வது உதவலாம்.

துஷ்ப்பிரயோக நபரால் இது கண்டுபிடிக்கப்பட, அல்லது அழிக்கப்பட இயலாத பாதுகாப்பான இடம் ஒன்றில் இந்தப் பதிவை வைப்பதை உறுதிப்படுத்துங்கள்.

### ☐ COVID-19-இன் காரணமாக நீங்கள் தாக்கமுற்றிருக்கிறீர்களா?

COVID-19 கட்டுப்பாடுகள் எதுவும் இருக்கும் பொழுது கூட, குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட தீங்கு அல்லது தீங்கு ஏற்படும் ஆபத்திலிருந்து தப்பிப்பதற்காக உங்களுடைய வீடு அல்லது தங்குமிடத்திலிருந்து உங்களால் வெளியேற இயலும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். விபரங்களுக்கு உங்களுடைய மாநில/எல்லைப்-பிரதேசத்தினது வலைத்தலத்தினைப் பாருங்கள்.

***வலைத்தலம்:*** australia.gov.au/states australia.gov.au/states

### ☐ நீங்கள் வேலை செய்துகொண்டிருந்தால், உங்களுக்குள்ள வேலை செய்வதற்கான உரிமைகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

சம்பளம் கொடுக்கப்படாத குடும்ப வன்முறை விடுப்பினை நீங்கள் எடுக்கவும், வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள வேலை ஏற்பாடுகள் வேண்டுமெனக் கேட்கவும் உங்களை அனுமதிக்குமாறு Fair Work Act அனைத்து முதலாளிகளையும் வேண்டுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? மேலதிகத் தகவல்களுக்கு Fair Work Ombudsman வலைத்தலத்தினைப் பாருங்கள்.

***வலைத்தலம்:*** fairwork.gov.au/leave/family-and-domestic-violence-leave

வரித் திருப்பல் (tax return) ஒன்றைச் செலுத்துவதில் அல்லது சமர்ப்பிப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், ‘ஆஸ்திரேலிய வரியிறுப்பு அலுவலக’த்திடம் வரி சம்பந்தப்பட்ட ஆதரவுதவிகள் உள்ளன.

***வலைத்தலம்:*** ato.gov.au/General/Support-in-difficult-times/Personal-crisis-support/#Familyanddomesticviolence

### உங்களுடைய பண விடயங்களில் உங்களுக்கு ஒத்தாசை தேவைப்படுகிறதா?

மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப உங்களுக்கு உதவவும், கடன் ஒன்றைக் கையாள்வதற்காக உங்களுக்குள்ள தெரிவுகளைப் பற்றிக் கலந்து-பேசவும் உங்களுக்கு உதவுவதற்காக சுயாதீனமான, மற்றும் அந்தரங்கமான சேவைகளை நிதிநிலை ஆலோசகர்கள் அளிப்பர்.

நிதிநிலை ஆலோசகர் ஒருவருடன் பேச, 1800 007 007-இல் ‘தேசிய கடன்-தொகை உதவி-இணைப்பு’(National Debt Helpline)டன் தொடர்புகொள்ளுங்கள். இந்த இலவச அவசர அழைப்பு காலை 9:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை இயக்கத்தில் இருக்கும். மேலதிக சாதனங்களும், மூலவளங்களும் National Debt Helpline வலைத்தலத்திலும் உள்ளன.

***வலைத்தலம்:*** ndh.org.au/

## ☐ நீங்கள் ஒரு மாணவ-மாணவியாக இருந்தால், உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஆதரவுதவி சேவைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அனைவரையும் வரவேற்பதாகவும், தோழமை மிக்கதாகவும் மற்றும் ஆதரவுதவியளிப்பதாகவும் இருக்கும் கல்வி அனுபவம் ஒன்றைப் பன்னாட்டு மாணவ-மாணவியருக்கு உருவாக்கித் தருவதில் ஆஸ்திரேலியக் கல்விச் சேவை வழங்குநர்கள் பெருமிதம் கொள்கின்றனர்.

உங்களுக்கு உதவக் கூடிய பல வகையான சிறப்புத்துவ சேவைகள் உள்ளன.

***வலைத்தலம்:*** studyaustralia.gov.au/english/live/support-services

## ☐ மற்ற ஆதரவுதவி சேவைகளைப் பற்றிய தகவல்களை எங்கே காணலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

தேசிய, மாநில மறும் எல்லைப்-பிரதேச இல்ல மற்றும் குடும்ப வன்முறை ஆதரவுதவி சேவைகள் பல கிடைக்கும்.

National Sexual Assault, Domestic and Family Violence Counselling Service (பாலியல் தாக்கல், குடும்ப வன்முறை - தேசிய அறிவுரையாலோசனை சேவை) மூலமாக தொலைபேசி மற்றும் இணையவழியிலான இலவச அறிவுரையாலோசனை கிடைக்கும். 1800 737 732-ஐ அழையுங்கள்

தற்காலிக விசாவில் இருந்துகொண்டு நிதிநிலைச் சிரமத்திற்கு ஆட்பட்டுவரும் தகுதி பெறும் நபர்களுக்கு ‘ஆஸ்திரேலிய செஞ்சிலுவை’யினால் நிதியுதவியளிக்க இயலும். தகவல்களுக்கு Family and Domestic Violence Financial Assistance Program -இற்குச் செல்லுங்கள். தேவைப்பட்டால், சட்ட மற்றும் புலப்-பெயர்வு ஆதரவுதவியைப் பெறுவதற்காகவும் அவர்கள் உங்களைப் பரிந்துரைக்கலாம்.

***வலைத்தலம்:*** redcross.org.au/get-help/help-for-migrants-in-transition/family-and-domestic-violence-financial-assistance

*உரைபெயர்ப்பாளருக்கான இந்த அடையாளக்-குறியீட்டை நீங்கள் பார்த்தால், நீங்கள் விரும்பும் மொழியில் பேசுவதற்கான உதவி வேண்டுமென நீங்கள் கேட்கலாம்*